RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



DOI: 10.34256/irjt22445

OPEN ACCESS

# பதினெண் கீழ்க்கணக்குச் சுட்டும் புலப்பாட்டுக் கோட்பாடுகள்

**க. மாலதி [அ, *], எ. கற்பகம்**

[அ] தமிழ்த்துறை, அரசு கலைக் கல்லூரி (தன்னாட்சி), (பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது), கரூர்- 639007, தமிழ்நாடு, இந்தியா.

# The Perceptual Theories Pointed out by Pathinen Kilkanakku

**K. Malathi [a, *], E. Karpagam [a]**

[a] Department of Tamil, Government Arts College, (Affiliated to Bharathidasan University), Karur-639007, Tamil Nadu, India

* Corresponding Author:
malathimalathik85@gmail.com

Received: 03-08-2022
Revised: 24-09-2022
Accepted: 02-10-2022
Published: 19-10-2022

Check for updates

**ABSTRACT**

The Pathinen Kilkanakku that appeared during the Sangam Dark period (The period AD 300-600) contains the concepts of morality, internal and external. In these books, poets have explained all the necessary information for the lives of the people. The love and affection of the way of life of the people who lived during this period should be discovered and people living in today's environment should know about it and make their lives better. In the literature of the Sangam dark period, messages about the lifestyle, social welfare, occupation, personal welfare, and public welfare of the people of that period are explained openly in such a way that we can all know about it. If each of us acts on the perceptual principles of the way of life and society of the people that these books show, we can see that human life will reach a higher level without harming other living beings. This article examines the principles of perception that the following account refers to.

**Keywords:** Pathinen Kilkanakku, Sangam period, Perceptual Principles, Lifestyle

## முன்னுரை

"கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளொடு முன் தோன்றிய மூத்தகுடி நம் தமிழ்க்குடியாகும்". தமிழ் மொழியானது காலத்தால் முற்பட்டது. தேனை விட மிகவும இனிமையானது. எல்லா மொழிகளுக்கும் தாயாக விளங்குகிறது. எழுத்து, சொல் போன்றவற்றிற்கு மட்டும இலக்கண்ம கூறாமல் மனிதனுடைய வாழ்விற்கும் இலக்கணம் (பொருள்) சிறப்பு வாய்ந்த மொழியாகத் திகழ்கிறது. செவ்வியல் இலக்கியங்களானது. மக்களுக்கு அளவறிய எண்ணற்ற பயனுள்ள தகவல்களைக் கொடையாக அளித்திருக்கின்றது.

சங்கம் மருவியகால இலக்கியங்களில், அக்கால மக்களின் வாழ்க்கைமுறை, சமூக நலன், தொழில், தனி மனித நலன் மற்றும் பொது மனித நலன் போன்றவை பற்றிய செய்திகளானது நாம் அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில் வெளிப்படையாக விளக்கப்பட்டுள்ளன. இந்நூல்கள் உணர்த்தும் மக்களின் வாழ்க்கை முறை, சமூகம் பற்றிய புலப்பாட்டுக் கோட்பாடுகளை அறிந்து நாம் ஒவ்வொருவரும் செயல்படுவோமானால் மனித வாழ்க்கையானது பிற உயிரினங்களுக்குத் தீங்கு விளைவிக்காத உயரிய நிலையை அடையும் என்பதை அறிய முடிகின்றது. இப்பதினெண் கீழ்க்கணக்குச் சுட்டும் புலப்பாட்டுக் கோட்பாடுகளை ஆராய்வதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

## புலப்பாடு

புலப்படு - புலப்பாடு, படு என்னும் தொழிற்பெயர் முதல் நீண்டு பாடு என்றாயிற்று. புலப்படு - அறிவின்கண் தோன்றுதல், நிகழ்தல், புலப்பாடு என்பது வெளிப்பாடு என்பதைக் குறிக்கின்றது. புலப்பாடு என்பது ஒன்றை வெளிப்படுத்துதல் என்று பொருளாகும். இலக்கியமானது தன்னைத் தெளிவாகப் புலப்படுத்த வேண்டும் என்பதை,

"தெளிவெனப்படுவது பொருள் புலப்பாடே" இந்நூற்பாவானது விளக்குகிறது (Puliyur Kesigan, 2013). மேலும், புலப்பாடு - நன்றாய்த் தெரிகை, புலப்படுதல் - தெரிதல், வெளிப்படுதல்என்று அகராதியானது விளக்கம் தருகின்றது. பதினெண் கீழ்க்கணக்கானது புலப்பாடு பற்றிய செய்திகளை வெளிப்படுத்துவதாக அமைகின்றது.

## வாழ்க்கை

மனிதர்கள் உயிரோடு இருப்பதை வாழ்க்கை என்பர். உயிரோடு இருப்பதற்கு இயங்குதல் வேண்டும். உயிரோடு இருப்பதற்கு உணவைத் தேடல் வேண்டும். உயிருக்கு மகிழ்வூட்ட உறுதியான உடல் வேண்டும். அந்த உடல் உடைகளால் இயங்க வேண்டும். உறைவிடம் வேண்டும். கூடி வாழுதல் வேண்டும். அதோடு அன்பை நாடி வம்பை விலக்கி வாழ்தல் வேண்டும். எல்லாரும் எல்லாமும் பெறுதல் வேண்டும். இப்படி வாழும் முறைக்குத்தான் வாழ்க்கை என்று பெயர்.

இந்த வாழ்க்கையானது பல ஆயிரம் ஆண்டுகளாக மனிதப்பிறவிகளாலும், மற்றைய பிறவிகளாலும் வாழப்பட்டு வருகின்றன. உடல், உயிரன்ன தலைவியும், தலைவனும் அன்புடன் இயைந்து வாழ்வதே வாழ்க்கையாகும். பண்டைத் தமிழர்கள் திருமண வாழ்க்கையை இல்லறம் என்று அழைத்தனர். இல்லறத்திலிருந்து கொண்டே அறத்தைச் செய்வது வாழ்க்கை பயனாகும்.

ஒத்த அன்பு, ஒத்த நலன், ஒத்த பண்பாடு கலந்து வாழுகின்ற வாழ்க்கையே "வாழ்க்கை அறம்" என்று கருதப்படுகிறது. உடுப்பதற்கு ஒரு துண்டாக இருந்தாலும் இருவரும் பகிர்ந்து தன்னலம் மறந்து இணைந்து வாழுகின்ற வாழ்க்கையே வாழ்வெனக் கருதப்படும். இது நம்முடைய பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் புலப்படுத்தும் பழந்தமிழரின் பண்பட்ட வாழ்க்கையாகும்.

## மனிதனின் வாழ்க்கை முறை

மனிதனின் வாழ்க்கையானது உயர்ந்த பண்பட்ட நிலையை அடைய வேண்டுமெனில் அம்மனிதன் தன்னுடைய கடமைகளை நன்றாக ஆற்றியிருத்தல் வேண்டும். அக்கடமையானது அன்பு, ஈகை, ஒழுக்கம், இல்லறம், மக்கட்பேறு, கொடை, கல்வி, மானம், நன்றியறிதல் போன்றவையாகும்.

இக்கடமைகளை சங்கம் மருவிய கால இலக்கியங்களானது புலப்படுத்துகின்றது.

## செவ்வியல் இலக்கியங்கள் உணர்த்தும் புலப்பாட்டுக்கோட்பாடுகள்

செவ்வியல் இலக்கியங்களானது, அக்கால மக்களின் வாழ்க்கை சார்ந்த அனைத்துத் தகவல்களையும் புலப்படுத்துவதாக அமைந்துள்ளன.

### அன்பு

அன்பு என்ற மொழியை ஊமையால் பேசமுடியும். செவிடனால் கேட்டுப்புரிந்து கொள்ள முடியும்.

"அன்பு என்பது ஒரு பாதை

ஊமைகள் பேசலாம்

குருடாகள் பார்க்கலாம்

செவிடர்கள் கேட்கலாம்" (Kumaar, 2008)

உயிர் வாழ்க்கையின் அடையாளம் அன்பு உள்ளத்தில் அன்பு இருத்தல் வேண்டும். இந்த அன்பானது உயர்திணையிடம் மட்டுமல்லாது அஃறிணையிடமும் இருக்கிறது. வாழ்வியல் முறைகளில் தலையாயதாக அன்பு இருக்கின்றது.

ஒத்தது அறிந்து அன்பை பகிர்ந்து அளிக்கும் மனிதரே உயிர் வாழ்வர் வாழ்க்கையையும், இலக்கியத்தையும் வரையறை செய்த பெருமை தமிழருக்கு உண்டாகும்.

உயர்திணையோ, அஃறிணையோ ஒவ்வொரு உயிர்களிடமும் அன்பு என்ற உயரிய கொள்கையானது புலப்பட வேண்டும் என்பதை பதினெண்கீழ்க்கணக்கு இலக்கியங்களானது வலியுறுத்துகின்றது.

உள்ளத்தில் அன்பு இருத்தல் வேண்டம். அப்படி அன்பு இல்லாத உயிரோடு வாழும் வாழ்க்கையானது. பாலை நிலத்தில் காய்ந்து போன மரத்திற்கு உதாரணமாகக் கூறப்பட்டுள்ளது.

"அன்பகத்தில்லா உயிர் வாழ்க்கை வன்பாற்கண்

வற்றல் மரந்தளர்த் தற்று" (Parimelalhagar, 2002)

பதினெண் கீழ்க்கணக்கானது அன்பு இல்லாத வாழ்க்கை பயனற்றது என்பதை உணர்த்துகின்றது.

அன்பு நிறைந்தவர்கள் தங்கள் உடலும் பிறருக்கு உதவும்படி வாழ்வார்கள். ஆனால், அன்பு இல்லாதவர்கள் எல்லாம் தமக்கே என்று வாழும் சுயநலம் கொண்டவர்களாக இருப்பார்கள்.

"அன்பிலார் எல்லாந் தமக்குரியர் அன்புடையார்

என்பும் உரியர் பிறர்க்கு" (Parimelalhagar, 2002)

குற்றமில்லாத மனத்தினைக் கொண்ட அரசன் எல்லோரிடமும் அன்பை செலுத்தி வாழ்வானால் தன்னைத் தாக்க வரும் பகைவரை எதிர்க்கத்தன்னுடைய படைகளுக்கு அன்பின் மூலம் எதிரியின் வீரத்துக்கு இணையான வழிவகைகள் கூறி அப்பகைவரைத் தோற்கடிப்பான்.

"பாயிரக் கூறிப் படைதொக்கால் என்செய்ப?"

இப்பாடலின் மூலம் பகைவரை வெல்லக்கூடிய ஆயுதமாகவும், தன் படைகளை முன்னேற்றப்பாதையில் அழைத்துச் சென்ற ஒரு படைத்தளபதியாகவும் அரசனின் அன்பானது இருந்துள்ளது என்பதை இவ்விலக்கியங்களானது புலப்படுத்தியுள்ளது.

சுனையின்கண் உள்ள சிறிய நீரைப் பிணைமான் உண்ண வேண்டும் என்று எண்ணி ஆண்மான் தன் அன்பின் மிகுதியால் பொய்யாக உறிஞ்சுகிறது. ஐந்தறிவு உடைய விலங்கினங்களும் தம்முடைய அன்பை வெளிக்காட்டுகின்றன.

"சுனைவாய் சிறுநீரை யெய்தாதென் றெண்ணிப்

பிணைமா னினிதுண்ண வேண்டிக் - கலைமாத்தன்

கள்ளத்தி னூச்சுஞ் சுரமென்பர் காதல

ருள்ளம் படர்ந்த நெறி".

பழிச்சொற்களானது அன்பில்லாதவரது வாயில் தோன்றும். ஒருபோதும் அன்புடையவர்களிடம் தோன்றாது. ஏனெனில் உள்ளத்தில் அன்பு கொண்டவர்கள் யாரிடமும் கடுஞ்சொற்களையும், தீய சொற்களையும் சொல்லமாட்டார்கள். இரக்ககுணம் உடையவர்களாகவே இருப்பர்.

"வடுச்சொல் நயமில்லார் வாய்த்தோன்றும் கற்றார்வாய்ச்

சாயினுந் தோன்றா கரப்புச்சொல் - தீய

பரப்புச்சொல் சான்றார்வாய்த் தோன்றா கரப்புச்சொல்

கீழ்கள்வாய்த் தோன்றி விடும்."

அன்பில்லாதவர் அளிக்கக்கூடிய உணவானது மனநிறைவைத் தராது. ஆனால், அன்புடையவர்கள் அளிக்கும் உணவானது சிறிய அளவாகவே இருந்தாலும் அதை உண்பவருக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கும்.

தன்மேல் உள்ளத்தில் அன்பில்லாதவர் இடத்தில் அளிக்கக்கூடிய உணவை உண்ணுதல் குற்றத்தைத் தரும்.

"இளமைப் பருவத்துக் கல்லாமை குற்றம்

வளமிலாப் போழ்தத்து வள்ளன்மை குற்றம்

கிளைஞரில் போழ்திற் சினங்குற்றம் குற்றத்

தமரல்லர் கையகத் தூண்."

அன்பு செலுத்தாமல் ஒருவரிடம் உறவாகவோ அல்லது நட்பாகவோ பழகமுடியாது. ஏனெனில் உண்மையாகப் பழகும் எண்ணமானது அன்பில்லாதவரிடம் இருக்காது.

"ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்

ஈரமில் லாதது கிளைநட் பன்று"

அன்புடையவர்கள் எப்பொழுதும் தம்மிடம் பிறர் எதிர்பார்க்கும் பொருளையோ அல்லது அன்பையோ யோசிக்காமல் கொடுப்பார்கள். ஆனால், அன்பில்லாதவர்கள் அதனை ஒருபோதும் கொடுக்கமாட்டார்கள். ஏனென்றால் சுயநலம் கொண்டவர்களாகவே இருப்பர். அன்புடையவர்கள் பிறர் விரும்பிய பொருளைக் கொடுத்தல் எளிதாகும்.

"ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்

ஈரம்வெய் யோர்க்கு நசைகொடை எளிது"

அன்புடன் உணவினையும், எள்ளினால் உண்டான எண்ணையையும், பருத்தியில் ஆன ஆடையையும் அன்புடன் கொடுத்து உதவியவன் தன் மனைவி மக்களோடு இன்புற்று வாழ்வான்.

"எள்ளே பருத்தியே யென்ன யுடுத்தாடை

வள்ளே துணியே யிவற்றொடு - கொள்ளென

அன்புற் றசனங் கொடுத்தான் றுணையினோ

டின்புற்று வாழ்வா னியைந்து"

"உன் அன்பின் தன்மைக்கு ஏற்றபடி உன் செயல்கள் இருக்கும்

உன் செயல்களுக்கு ஏற்றபடி உன் வாழ்க்கை இருக்கும்"

"அமுதம் உண்க. அடிகள் ஈங்கு என" (Somasundaranar, 1972)

ஒவ்வொரு உயிர்களிடமும் அன்பு புலப்படுமானால் அங்கே இன்பமான சூழல் நிலவும் என்பதை அறிய முடிகின்றது.

செவ்வியல் இலக்கியங்களானது உயர்திணை மற்றும் அஃறிணை உயிர்களின் அன்பின் புலப்பாட்டு செய்திகளை உணரவைக்கிறது. இவ்விலக்கியங்கள் புலப்படுத்தும் அன்பை அறிந்து நாம் ஒவ்வொருவரும் செயல்படுவோமானால் மனித வாழ்க்கையில் பிரிவு என்பது இருக்காது.

### ஈகை

ஈகை - கொடை

செவ்வியல் இலக்கியங்களானது ஈகையின் புலப்பாட்டை நாம் அறிந்துகொண்டு செயல்பட வேண்டும் என்ற உயரிய எண்ணத்துடன் தோன்றியுள்ளது.

“இல்லை” என்று வருபவர்க்கு இல்லை என்று கூறாது அவரது பசிப்பிணி தீர்க்கும் அறச்செயலே ஈகையாகும். பசிப்பிணி தீர்ப்பது மட்டுமல்ல ஈகை ஒரு பொருளும் இல்லாத வறியவர்க்கு ஒரு பொருளைக் கொடுத்து உதவுவதுமாகும். ஒன்றை வேண்டுபவர்க்கு அவர் தேவையை அறிந்து இல்லை என்று கூறாமல் கொடுப்பதுமாகும்.

“ஈ” என்றால் தா அல்லது கொடு என்ற பொருளைக் குறிக்கிறது. மிகவும் வறுமையான நிலையில் உள்ள ஒருவன் தன்னைவிட உயர்ந்த நிலையில் உள்ளவனிடம் கேட்பதாகும்.

“அவற்றுள் ஈ என் கிளவி இழிந்தோன் கூற்றெ” (Ilampuranar, 2011)

ஒருவன் தனக்குச் செல்வம் இல்லாமல் போன காலத்திலும் தன்னிடமுள்ள பொருளை செல்வம் இருக்கும் காலத்தைப் போல தன்னை நாடி வந்தவர்களுக்கு மிகவும் மகிழ்ச்சியோடு கொடுக்கும் நல்ல குணமுள்ள மனிதருக்கு அவ்வுலகத்துக் கதவுகள் அடைக்கப்படாது.

“இல்லா விடத்தும் இயைந்த அளவினால்

உள்ள விடம்போற் பெரிதுவந்து - மெல்லக்

கொடையொடு பட்ட குணனுடைய மாந்தர்க்கு

அடையாவாம் ஆண்டைக் கதவு”

ஒருவரிடமிருந்து இன்னொருவருக்குக் கொடுக்கக்கூடிய ஈகை என்ற குணமானது அவருக்கு செல்வத்தினால் உண்டாகும். ஏனெனில், ஒருவனிடம் பொருள் இருந்தால் மட்டுமே மற்றவருக்கு கொடுத்து உதவ முடியும்.

“வளப்பாத்தி யுள்வளரும் வண்மை கிளைக்குழாம்

இன்சொற் குழியுள் இனிதெழுஉம் வன்சொல்

கரவெழுஉங் கண்ணில் குழியுள் இரவெழுஉம்

இன்மைக் குழியுள் விரைந்து.”

“செல்வத்துப் பயனே ஈதல்”

தன்னை நாடி வருபவர்களுக்கு இல்லை என்று கூறாத மனவுறுதியைப்போல் உறுதியான எண்ணம் வேறு கிடையாது.

“திருவின் திறலுடைய தில்லை - ஒருவற்குக்

கற்றலின் வாய்த்த பிறவில்லை - எற்றுள்ளும்

இன்மையின் இன்னாதில்லை யில்லென்னாத

வன்மையின் வன்பாட்ட தில்”.

வறுமையில் உள்ளவர்களுக்கு ஒன்று கொடுத்து உதவ வேண்டும் அப்படிக்கொடுத்து உதவுதலே உண்மையான ஈகையின் மகிழ்ச்சியாகும்.

“மறக்களி மன்னர்முன் தோன்றுஞ் சிறந்த

அறக்களி இல்லாதார்க் கீயுமுன் தோன்றும்

வியக்களி நல்கூர்ந்தார் மேற்றாங் கயக்களி

ஊரில் பிளிற்றி விடும்"

தான் உண்ணுவதோடு மட்டுமல்லாமல் பிறருக்குக் கொடுத்து உதவ வேண்டும். பிறரின் பசியைப் போக்கக்கூடியவன் கடவுளாகத் தெரிவான். தனக்கு மட்டுமல்லாது பிறருக்கு உணவினைக் கொடுத்து உண்ணக்கூடியவன் தன்னுடைய வாழ்வில் புகழ் உடையவனாக விளங்குவான்.

"ஈத்துண்பா னென்பான் இசைநடுவான் மற்றவன்

கைத்துண்பான் காங்கி யெனப்படுவான் தெற்ற

நகையாகும் நண்ணார்முன் சேறல் பகையாகும்

பாடறியா தானை இரவு"

ஈகை என்பது இல்லாத ஏழை - எளியவர்க்குக் கொடுக்கக்கூடிய உணவோ, பொருளோ அல்லது பணமாகவோ இருக்கலாம். இதுதவிர பிறருக்குச் செய்யும்போது அவர்கள் தேவை அறிந்து எதிர்பார்த்துக் கொடுப்பதையும் ஈகை எனலாம்.

"வறியார்க்கொன்று ஈவதே ஈகை மற்றுஎல்லாம்

குறியெதிர்ப்பை நீரது உடைத்து"

"ஆற்றுதல் என்பது ஒன்று அலர்ந்தவர்க்கு உதவுதல்"

ஒருவன் தான் உழைத்து உண்ண வேண்டும். அப்படி உழைத்ததை சேமிக்க வேண்டும். சேமித்ததோடு மட்டுமல்லாமல் அதை உண்ணும் போது பிறருக்குப் பகுத்துக்கொடுத்து உண்ண வேண்டும். அவ்வாறு பகுத்துக்கொடுத்து உணவருந்தியவனைத் தீய பசிநோய் என்றும் தீண்டாது.

"பாத்தூண் மரீஇ யவனைப் பசிஎன்னும்

தீப்பிணி தீண்டல் அரிது"

ஒரு ஏழைக்குக் கொடுத்து உதவ வேண்டும். அப்படிக் கொடுத்து உதவாதபோது நாம் விரும்பாத சாவும் நமக்கு விருப்பத்தைத் தந்து இறக்க நேரிடும்.

"சாதலின் இன்னாத்து இல்லை இனிததூஉம்

ஈதல் இயையாக் கடை"

வறியவர்க்குக் கொடுத்து உதவ வேண்டும். அப்படிக்கொடுத்து உதவும்போது அவர்களுடைய வாழ்வில் புகழானது கிடைக்கும். இதுவே, ஒவ்வொருவருடைய வாழ்விலும் உயிருக்குக்கிடைத்த ஊதியமாகும்.

"ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது

ஊதியம் இல்லை உயிர்க்கு"

சிறந்த செல்வம் என்னவென்றால் மேகமானது கைம்மாறு கருதாமல் மண்ணில் உள்ள உயிர்களுக்காக எப்படி மழையைப் பொழிவிக்கின்றதோ அதேபோல் பிறருக்கு உதவிசெய்ய வேண்டும்.

"பிறர்தன்னைப் பேணுங்கால் நாணலும் பேணார்

திறன்வேறு கூறிற் பொறையும் - அறவினையைக்

காராண்மை போல வொழுகுதலும் இம்மூன்றும்

ஊராண்மை யென்னுஞ் செருக்கு."

வறுமையால் துன்பம் அடைந்தவர்களுக்கு உதவி செய்தால் அதாவது உணவையோ அல்லது ஒரு பொருளையோ கொடுத்தால் அது வெயிலால் சுடப்பட்ட வெம்மையான பாலைநிலத்தில் பெய்த மழைக்குச் சமம்.

“கரப்புடையார் வைத்த கடையும் உதவா
துரப்புடை மன்னர்க்கே துப்புரவ தல்லால்
நிரப்பிடும்பை மிக்கார்க் குதவஒன் றீதல்
சுரத்திடைப் பெய்த வயல்.”

“பெருமலை விடரகத்து அரு மிசைக்கொண்ட
சிறியிலை நெல்லித் தீங்கனி குறையாது
ஆதல் நின் அகத்து அடக்கி
சாதல் நீங்க எமக்கு ஈத்தனையே”.

ஈகை என்ற குணமானது ஒவ்வொரு மனிதனுடைய வாழ்விலும் கட்டாயம் இருக்க வேண்டிய ஒன்றாகும். இந்தக் குணத்தை உடையவர்கள் தங்கள் வாழ்வில் நல்ல நிலையை அடைவர் என்பதை பதினெண் கீழ்க்கணக்கு நூல்களானது புலப்பட வைக்கிறது.

## முடிவுரை

சங்கம் மருவிய காலத்தில் தோன்றிய இவ்விலக்கியங்களானது மக்களுடைய வாழ்க்கையானது சிறந்த முறையில் அமைய வேண்டும் என்ற உயரிய எண்ணத்துடன் எழுதப்பட்டதாகும். பதினெண் கீழ்க்கணக்கு நூல்களானது மக்களுக்கு அறம், அகம் மற்றும் புறம் பற்றிய கருத்துக்களைத் தெளிவாக எடுத்துரைக்கின்றது. அகமும், புறமும் மனிதனின் வாழ்வியல் முறைகளை நல்ல முறையில் மாற்றியமைக்காது. அவன் பின்பற்றக்கூடிய வாழ்வியல் அறமும் சேர்ந்துதான் அதனை நிர்ணயிக்கின்றன. அகம், புறம் மற்றும் அறம் சார்ந்த கருத்துக்களை அறிந்து நாம் ஒவ்வொருவரும் செயல்படவேண்டும். அவ்வாறு அறிந்து செயல்படும்போது மனிதனுடைய வாழ்வில் இன்பம், நிம்மதி, மகிழ்ச்சி போன்றவற்றை அடையலாம் என்பதை இக்கட்டுரை தெளிவுபட உணர்த்துகிறது. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களானது மக்களிடையே அறத்தைக் கற்பிக்கவேண்டும் என்ற உயரிய நிலையில் எழுந்ததாகும். மக்களுடைய வாழ்வில் தீய பழக்கங்கள், வஞ்சகம், பொய் கூறுதல், பிற உயிர்களைக் கொல்லுதல் போன்றவை தோன்றும் பொழுது எத்தகைய விளைவு நேரிடும் என்பதை இந்நூல்களானது உணர்த்துகிறது. மேலும், நல்ல குணங்கள் தோன்றும் பொழுது எத்தகைய இன்பம், புகழ் போன்றவற்றை அடையலாம் என்பதையம் அறிய முடிகின்றது. ஒவ்வொரு மனிதனுடைய வாழ்வும் நல்ல நிலையை அடைய வேண்டுமெனில் பதினெண் கீழ்க்கணக்கு உணர்த்தக்கூடிய கருத்துக்களை நாம் ஒவ்வொருவரும் அறிந்து செயல்பட வேண்டும் என்பதை இக்கட்டுரையின் மூலம் உணர முடிகின்றது.

## References

Ilampuranar, (2011) Tholkappiyam moolamum uraiyum, Saradha pathippagam, Chennai, India

Kumaar, S. (2008) Saantror Ponmozhigal, Arivu Pathippagam, Chennai, India

Parimelalhagar, (2002) Thirukural, Saradha Pathippagam, Chennai, India

Puliyur Kesigan, (2013) Thandiyalangaram, Srisenbaga Pathipagam, Chennai, India

Somasundaranar, Po.V. (1972), Silapathikaram Mulamum Uraium, Thirunelveli, South India, Saiva Siththantha Nool Pathippagam, Chennai, India.

Subramanian, S.V. (2014) Meiyappan Tamil Agarathi, Manivaskar Publishing House, Chennai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License